புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2056 • ஜூலை 17, 2025 • புரட்சி 25 • முழக்கம் 31 • விலை ரூ.6.00



## திராவிட மாடலும் மோடி மாடலும்!



இதுவரை மக்கள் தங்கள் பிரச்சனைகளுக்கு அரசு நிர்வாகத்திடம் மனு போட்டுக் கொண்டிருந்தார்கள்.

அரசு அலுவலகத்தின் ஒவ்வொரு மேசையையும் கடந்து ஒப்புதலைப் பெற்று மக்களுக்கான நிவாரணம் வழங்குவதற்கு எத்தனை காலம் ஆகும் என்று தெரியாத நிலை தான் நீடித்து வந்தது.

தமிழக முதலமைச்சர் மு.க ஸ்டாலின் இதில் மகத்தான புரட்சியை நிகழ்த்தி வருகிறார். அரசு நிர்வாகத்தை மக்களிடம் கொண்டு செல்வது தான் அவர் நிகழ்த்திவரும் நிர்வாகப் புரட்சி.

'உங்களுடன் ஸ்டாலின்' திட்டம் மட்டுமல்ல; ஏற்கனவே மக்களுடன் கல்வி, மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் மக்களுக்கு நேரிடையாக கொண்டு சேர்க்கப்படுகின்றன.

முதலமைச்சர் பங்கேற்கும் அனைத்து அரசு நிகழ்ச்சிகளிலும் பல்லாயிரக்கணக்கில் மக்களை நேரடியாக சந்தித்து உரையாடி அவர்களின் மனுக்களை பெற்று வருகிறார்.

கோப்புகளோடு மட்டும் செயல்பட்ட நிர்வாகத்தை மக்களிடம் கொண்டு வந்து இணைத்துள்ள இந்த நடைமுறை 'திராவிட மாடல்' ஆட்சியின் தனித்துவமான சிறப்பு.

இன்று (16.05.2025) 'டைம்ஸ் ஆப் இந்தியா' பத்திரிக்கையில் வந்திருக்கிற செய்தியை சுட்டிக்காட்டவிரும்புகிறோம்.

ஒன்றிய அமைச்சரவை செயலாளர் டி.வி சோமநாதன், துறை செயலாளர்களுக்கும், மூத்த அதிகாரிகளுக்கும் கடிதம் எழுதி இருக்கிறார்.

அதில் "பிரச்சனைகளோடு வரும் மக்களால் உங்களை சந்திக்க முடிவதில்லை; அரசு கூட்டங்களை நட்சத்திர ஓட்டல்களில் கிளப்புகளில் மட்டும் நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். மக்களை சந்தித்தால் மட்டுமே, உண்மை நிலவரத்தை அறிய முடியும். தவறுகளை திருத்திக்கொள்ள முடியும்...அவர்களின் தவறான புரிதலுக்கு விளக்கம் அளிக்கவும் முடியும். உங்களைத் தேடி வரும் மக்களை சந்திக்க முடியாத நிலையை நிறுத்துங்கள்" என்று அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (Cabinet secretary asks top bureaucrats to be accessible)

"நிர்வாகக் கட்டமைப்பை மக்களிடம் கொண்டு வருவது திராவிடமாடல்."

"மக்களை சந்திக்காமல் நட்சத்திர ஹோட்டல்களில் நிர்வாகம் நடத்துவது மோடி மாடல்"

## உ.பியில் 5000 பள்ளிகள் மூடல்

உத்தரப் பிரதேச அரசு, குறைந்த மாணவர் எண்ணிக்கை கொண்ட அரசுப் பள்ளிகளை மூட உத்தரவு பிறப்பித்துள்ளது.

குறிப்பாக, 8-ஆம் வகுப்பு வரையிலான பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கை 50க்கும் குறைவாக இருந்தால், அவற்றை மூட உள்ளது. பள்ளிக்குச் செல்லும் வழியில் ஆறுகள், நெடுஞ்சாலைகள், ரயில் பாதைகள் குறுக்கிட்டால், அந்தப் பள்ளிகளையும் மூட உத்தரவிட்டுள்ளது. இதையடுத்து ஆயிரக்கணக்கான மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது.

மாநிலத்தின் கல்விக் கட்டமைப்பையே மாற்றும் இந்த உத்தரவுக்கு எதிராக போராட்டங்கள் வலுப்பெற்றுள்ள நிலையில், இது தொடர்பான வழக்கை உச்சநீதிமன்றம் அவசர வழக்காக விசாரிக்க உள்ளது. இந்த உத்தரவின் மூலம், 3 லட்சம் குழந்தைகள் வேறுபள்ளிகளுக்கு மாற்றும் நிலை ஏற்பட்டுள்ளதாக மனுவில் கூறப்பட்டுள்ளது. சுமார் 5 ஆயிரம் பள்ளிகள் மூடப்பட உள்ளன. இந்த நடவடிக்கை சுமார் 27 ஆயிரம் அரசுப் பள்ளிகளை பாதிக்கும். 35 ஆயிரம் உதவி ஆசிரியர்கள் மற்றும் 27 ஆயிரம் தலைமை ஆசிரியர்களுக்கு பணியிடக் குழப்பங்களை உருவாக்க உள்ளது. இந்த பள்ளிகளின். உதவியாளர்கள் உள்ளிட்டோரும் வேலை இழக்க உள்ளனர்.

## விநாயகன் அரசியல் ஊர்வலத்தை கட்டுப்படுத்துக! கழக சார்பில் காவல்துறையில் மனு!



விநாயகர் ஊர்வலம் என்ற பெயரில் கலவரத்தைத் தூண்டும் சங் பரிவார அமைப்புகளைக் கட்டுப்படுத்தவும், அனுமதி இல்லாத இடங்களில் சிலைகளை வைத்து மத மோதல்களைத் தூண்டுவோர் மீது உரிய நடவடிக்கை எடுக்க கோரியும், விநாயகர் சதுர்த்தி ஊர்வலங்களில் நடக்கும் அத்துமீறல் மற்றும் விதிமீறல்களைத் தடுக்கக் கோரியும், சிலைத் தயாரிப்பு - ஒலி பெருக்கி பயன்படுத்துதல் உள்ளிட்ட அரசு வகுத்த வழிகாட்டு நெறிகளை சரியான முறையில் பின்பற்ற வேண்டும், அதை அரசு கண்காணிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியும், நீதி மன்றங்களை மதிக்காமல் சட்டம் ஒழுங்கை சீர்குலைக்கும் வகையிலும், சுற்றுச்சூழலுக்கு பேராபத்துகளை விளைவிக்கும் வகையிலும் இந்த நிகழ்ச்சியை இவர்கள் நடத்தி வருகிறார்கள்.

நீதிமன்ற ஆணைகள், தமிழ்நாடு அரசின் ஆணைகளை அமுல்படுத்தி கடமையாற்ற வேண்டிய காவல்துறை மற்றும் மாநில, மாவட்ட அரசு அதிகாரிகள் தொடர்ந்து தங்கள் கடமையை செய்ய வலியுறுத்தி மனுக்களை நீதிமன்ற ஆணை நகல்களுடன் இணைத்து கோரிக்கை மனு சேலம் மாநகர காவல் ஆணையர் அலுவலகம்,மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம், மாவட்ட தமிழ்நாடு இந்து அறநிலையத்துறை உள்ளிட்ட இடங்களில் கழகத்தின் சார்பில் மனு அளிக்கப்பட்டது.

சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் தோழர் டேவிட், சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணன், சேலம் மாவட்ட இளைஞர் அணி செயலாளர் பிரபாகரன், சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வெற்றிமுருகன், சேலம் மாநகர அமைப்பாளர் தேவராஜ், தோழர் பாலாஜி ஆகியோர் இணைந்து கோரிக்கை மனுவை அளித்தனர்.



**சென்னை :** மாவட்டக் கழகம் சார்பாக காவல் துறை தலைமை இயக்குனரிடம் மனு அளித்தனர். தலைமை நிலைச் செயலாளர் தபசி குமரன், மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி, மாவட்டத் தலைவர் வேழவேந்தன், மாவட்ட அமைப்பாளர் எட்வின் பிரபாகரன், திருவல்லிக்கேணி பகுதி தலைவர் கோபி, திருவல்லிக்கேணி பகுதி அமைப்பாளர் சூர்யா, அசோக் ஆகியவர்கள் உடன் சென்றனர்.



**ஈரோடு தெற்கு:** மாவட்டக் கழகம் சார்பாக ஈரோடு மாவட்ட போக்குவரத்து அலுவலகம், இந்து அறநிலையத்துறை, மாசுகட்டுப்பாட்டு வாரியம், மாநகராட்சி, நகராட்சி அலுவலர்களுக்கு கழகத்தின் சார்பில் பதிவுத் தபால் அனுப்பபட்டது.

## பெரியார் பல்கலைகழகத்தில் ஜாதியப் பாகுபாடு



சேலம் பெரியார் பல்கலையில் ஜாதியப் பாகுபாடு, வன்கொடுமை நிலை தமிழக அரசு தலையிட்டு தமிழ்த் துறைப் பேராசிரியர் பெரியசாமி மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதுகுறித்து கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை:

"சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தில் பட்டியலின முனைவர் பட்ட மாணவர்கள் முனைவர் பட்டத்தை முடிக்க முடியாமல் தமிழ் துறைப் பேராசிரியர் பெரியசாமி இடையூறு செய்து வருவதால் பல பட்டியலின முனைவர் பட்ட மாணவ மாணவிகள் வெளிப்படையாகப் புகார் அளித்துள்ளது மிகவும் வேதனையான ஒன்றாகும்.

படிக்கும் மாணவர்களை வீட்டு வேலை செய்யச் சொல்வது, வீட்டிற்குத் தண்ணீர் பாய்ச்சக் கூறுவது, மளிகை பொருட்களை வாங்க சொல்வது போன்ற கொடுமைகள் பெரியார் பல்கலையில் நடப்பது வேதனையான ஒன்று. இனியும் இதை அனுமதிக்க முடியாது. பட்டியலின, மிகப்பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவிகளை வேலைக்காரர்களாக எஜமான மனப்பான்மையோடு நடத்துவது கண்டனத்திற்கு உரியது.

பட்டியலின, பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஆய்வு மாணவர்கள் (19 பேர்) பாதியிலேயே இவரின் கொடுமை தாங்காமல் நின்று விட்டதாக இன்றைய ஆங்கில ஹிந்து நாளிதழில் வந்த செய்தி மிகுந்த மன வேதனையை அளிக்கிறது. சில மாணவர்களைத் தொடர்பு கொண்டபோது ஏறத்தாழ இருபது நாள்களுக்கு முன்பே முன்னதாகவே துணைவேந்தர் பணி அமைப்புக் குழுவுக்கு விரிவான புகார்களை அளித்திருந்தும் எந்த பலனும் இல்லை என்பதாலேயே இந்து நாளேட்டுக்கு செய்தியைக் கொண்டு போனதாகவும் அறிந்தோம். மேலும் இதே பேரா. பெரியசாமி மீது உயர்கல்வித்துறை விசாரணை செய்து அளித்துள்ள அறிக்கை மீதும் எந்த நடவடிக்கையும் இல்லை என்பதுகூட அவருக்கு துணிச்சலைக் கொடுத்திருக்கலாம்.

ஜாதீயப் பாகுபாடு, பட்டியலின மாணவர்களைக் கேவலமாக நடத்துவதை அரசு இனியும் அனுமதிக்கக் கூடாது. தமிழக அரசு இனியும் காலந்தாழ்த்தாமல் இரும்புக் கரம் கொண்டு இதை அடக்குவதுடன், சம்பந்தப் பட்ட புகாரளித்த பட்டியலின மாணவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்க வேண்டும்; பெரியசாமியால் முனைவர் பட்டத்தை முடிக்காத நிலைக்குத் தள்ளப்பட்ட ஆய்வு மாணவர்கள் முனைவர் பட்டத்தினை முடித்திட விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுவே நமது கோரிக்கை.

பேரா.பெரியசாமியின் கையாளாக இருந்து ஆராய்ச்சி மாணவர்களை ஆராய்ச்சியினை முடிக்க முடியாமல் பல்வித இன்னல்களுக்கு ஆளாக்கி வரும் ஆராய்ச்சி வளர்ச்சிப் பிரிவு ஒருங்கிணைப்பாளர் முனைவர் பிரகாஷ் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த பிரகாஷ்தான் தமிழக அரசுக்கு எதிராக ஆளுநர் கூட்டிய துணை வேந்தர் மாநாட்டில் சேலம் பெரியார் பல்கலைக் கழகத் துணை வேந்தர் சார்பில் கலந்து கொண்டவர் ஆவார்.

மேலும் இது தொடர்பாக தமிழக அரசு முறையான விசாரணைக்கு உடனடியாக உத்திரவிடுவதுடன், விசாரணை முறையாக நடைபெற பேரா.பெரியசாமியை உடனடியாக பணியிடை நீக்கம் செய்ய வேண்டும். தற்பொழுது தமிழக அரசின் நேரடிப் பார்வையில் பெரியார் பல்கலை இயங்குவதால் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். பெரியார் பெயரில் இயங்கும் பல்கலைக்கழகத்தில் ஜாதீய பாகுபாடு கொடுமை என்பதனை அரசு வேடிக்கைப் பார்க்கக் கூடாது என்பதோடு உரிய சட்ட நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்."

**- கொளத்தூர் மணி,**
**தலைவர்,**
**திராவிடர் விடுதலைக்கழகம்.**
*11.07.2025*

# தலையங்கம்

# காவிமயமாகிறதா நீதித்துறை?

நீதிமன்றங்கள் அரசியல் சட்டத்தின் அடிப்படைகளை தகர்ப்பதற்கும் தங்களின் சொந்த கருத்துகளை பரப்புவதற்குமான மேடைகளாகவும் மாறி வருகின்றன. நீதிமன்றம் என்பது 'பார்ப்பன மன்றமாகவே' இருக்கிறது என்று வெளிப்படையாகவே பெரியார் அறிவித்தார். தன்மீது தொடரப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கிலேயே "பார்ப்பனர்கள் நீதிபதியாக வாழும் நாடு கடும்புலி வாழும் காடு" என்று நீதிபதிகள் முன் அறிக்கை சமர்ப்பித்தார்.

சமூக நீதியின் தாய் வீடு என்று சொல்லப்படும் தமிழ்நாட்டிலேயே நீதிமன்றம் நவீன சனாதனத்தையும், வர்ணாஸ்ரமத்தையும் பேசிக் கொண்டு இருக்கிறது. இதற்கு ஏராளமான சான்றுகளை பட்டியலிட முடியும். சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கக் கூடிய 'பிராமணர்' சாப்பிட்ட எச்சில் இலையில் உருண்டு புரளும் சடங்கை பாரம்பரிய மதச் சடங்கு என்று நீதிபதி ஜிஆர் சுவாமிநாதன் தீர்ப்பளித்தார். உச்சநீதிமன்றத்தாலும் பிறகு சென்னை உயர்நீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் அடங்கிய அமர்வினாலும் தடை செய்யப்பட்ட இந்த சடங்கை சட்டத்தை மீறி நீதிபதி ஜிஆர் சுவாமிநாதன் அனுமதித்தார். கோயில்களை அறநிலையத்துறையிடமிருந்து மீட்க வேண்டும் என்ற பாஜகவின் கருத்தை ஆதரிக்கும் கருத்தரங்கத்துக்கு தலைமை தாங்கி பேசினார்.

தமிழ்நாடு அரசு மசோதாக்களை ஆளுநர் கிடப்பில் போட்டது சட்ட விரோதம் என்று உச்ச நீதிமன்றம் அறிவித்தது. பல்கலைக்கழக துணைவேந்தர்கள் தமிழ்நாட்டு முதலமைச்சரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட மசோதாவும் அதில் அடங்கும். நெல்லை மாவட்ட பாஜக தலைவர் துணைவேந்தர் நியமன உரிமை உரிமையை எதிர்த்து வழக்கு தொடர்ந்தார். மதுரை உயர்நீதிமன்ற கிளையின் விசாரணை வரம்புக்கு உட்பட்ட இந்த வழக்கு சென்னை உயர் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் முன் விசாரணைக்கு வந்தது குறிப்பிடத்தக்கது.

துணைவேந்தர்களை நியமிக்க தமிழக முதல்வருக்கு உச்ச நீதிமன்றம் வழங்கிய உரிமைக்கு தடை விதித்தார். உச்சநீதிமன்ற தீர்ப்பை வெளியிட்ட உடன் அரசிதழில் (கெசட்) பதிவு செய்தது தமிழ்நாடு அரசு. இந்த அரசிதழை திருத்தி மோசடியாக மனுதாரர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார் என்று அரசு வழக்கறிஞர் சுட்டிக்காட்டியதை நீதிபதி கவனத்தில் எடுக்கவில்லை. வயலூர் முருகன் கோயிலில் உரிய அர்ச்சகர் பயிற்சி பெற்ற பார்ப்பனரல்லாத அர்ச்சகர்கள் நியமனத்தை ஜீ.ஆர்.சுவாமிநாதன் இரத்து செய்தார். 'கோத்திரம்,குலம்' என்ற அடிப்படையில் உரிமை கேட்டு வழக்கு தொடர்ந்த பிரிவினரையே அர்ச்சகராக நியமிக்கலாம் என்று தீர்ப்பு வழங்கினார்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சனாதனம் ஒழிக்கப்பட வேண்டும் என்று பேசியதை எதிர்த்து ஏராளமான வழக்குகள் வந்தன. பல்வேறு மாநிலங்களில் வழக்குகள் தொடரப்பட்டன. சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபதி அனிதா சுமந்த் முன் விசாரணைக்கு வந்தது. வழக்கின் எல்லைக்கு அப்பால்சென்று சனாதனத்தை நியாயப்படுத்தி கருத்தரங்கு பேச்சைப் போல் தீர்ப்பு எழுதினார். நீதிமன்ற தீர்ப்பு அரசிதழில் வெளியானதற்குப் பிறகு விதிகளுக்கு மாறாக தீர்ப்பை திருத்தி எழுதி மீண்டும் அவர் வெளியிட்டார்.

அரசிதழில் வெளியான தீர்ப்பில் ஒரு புள்ளியைக் கூட மாற்றக் கூடாது என்பது விதி. ஆனால் அவர் அதை மதிக்கவில்லை. தமிழ்நாட்டில் ஊடகங்கள் இந்த முறைகேடுகளை கண்டு கொள்ளாமல் மவுனம் சாதித்தன. திருவாரூர் அரசு கல்லூரியில் சனாதன கருத்தரங்கம் ஒன்று நடத்தப்படுவதை எதிர்த்து இந்து முன்னணி வழக்கு தொடர்ந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி என்.சேஷஷாயி, சனாதனம் தேசத்தின் கடமை, அரசர், மக்கள் பெற்றோர், குடும்பத்தின் கடமை. இதை அழிக்க வேண்டுமா? என்று மத பரப்புரையாளராகவே பேசினார். தேசத்தின் அடையாளம் சனாதனம் என்று அரசியல் சட்டத்தில் எந்த பிரிவு கூறுகிறது?

மருத்துவ கல்லூரிகளில் 'டீன்கள்' நியமனம் தற்காலிகமானதாக இருக்கக் கூடாது என்ற வழக்கை விசாரித்த நீதிபதி சுப்ரமணியம் இந்த வழக்கிற்கு தொடர்பு இல்லாத, மாணவர்களிடையே ஜாதி மோதல்களை தடுக்க நியமிக்கப்பட்ட நீதிபதி சந்துருவின் அறிக்கையை கடுமையாக விமர்சித்தார். அந்த அறிக்கை தனக்கு ஏற்புடையது அல்ல என்றும் ஜாதியப் பாகுபாடுகளை சகிப்புத்தன்மையால் மட்டுமே அகற்ற முடியும் என்று கூறினார். அறிக்கை வந்த உடனே தான் நெற்றியில் திலகம் இட்டு நீதிமன்றத்திற்கு வரத் துவங்கியதாக கூறி ஜாதி அடையாளத்தை நியாயப்படுத்தினார்.

திரைப்பட சண்டை பயிற்சியாளர் கனல்கண்ணன் என்பவர் திருவரங்கத்தில் உள்ள பெரியார் சிலை உடைக்கப்பட வேண்டும் என்று வன்முறையை தூண்டும் வகையில் பேசினார். வழக்கு தொடரப்பட்டு குற்றப்பத்திரிக்கையும் தாக்கல் ஆனது. வழக்கை விசாரித்த நீதிபதி பி.ஜெயச்சந்திரன் வழக்கை தள்ளுபடி செய்தார். கடவுள் மறுப்பு வாசகம் கோபத்தைத்தான் உருவாக்கும்; அந்த கோபத்தில் நியாயம் இருக்கிறது என்று தனது தீர்ப்பில் குறிப்பிட்டதோடு இந்த பேச்சினால் கலவரம் எதுவும் நிகழவில்லை எனவே இந்த வழக்கை தள்ளுபடி செய்கிறேன் என்று தீர்ப்பு எழுதினார். திருவரங்க பெரியார் சிலையில் கடவுள் மறுப்பு வாசகமே இடம் பெறவில்லை என்பது தான்உண்மை. இதை விசாரித்து அறியாமலேயே மனுதாரரின் கருத்தை அப்படியே ஏற்று நீதிபதி தீர்ப்பு எழுதினார்.

நீதிபதிகளின் கையொப்பம் இல்லாமல் வெளியானது பாபர் மசூதி இடிப்பு வழக்கு. ராமர் கோயில் இடிக்கப்பட்டது என்பதற்கு எந்த ஆதாரங்களும் இல்லை என்று கூறிய தீர்ப்பு மக்களின் நம்பிக்கையின் அடிப்படையில் ராமன் கோயில் கட்டுவதற்கு அனுமதிப்பதாக கூறியது. சட்டத்தை ஒதுக்கிவிட்டு நம்பிக்கையின் அடிப்படையில் மட்டும் வழங்கப்பட்டது இந்த தீர்ப்பு. கடவுள் வழியாக இந்த தீர்வு தன்னிடம் தெரிவிக்கப்பட்டதாக அமர்வில் இடம்பெற்ற நீதிபதி சந்திர சூட் கூறினார். தீர்ப்பு எழுதிய நீதிபதிகள் அனைவருக்கும் பதவி ஓய்வுக்குப் பிறகு ஒன்றிய அரசு பதவிகளை வழங்கி கவுரவித்துள்ளது.

மத்தியப் பிரதேச உயர்நீதிமன்ற நீதிபதிகள் தர்மாதீகாரி மற்றும் கஜேந்திர சிங் ஆகியோர் ஆர்.எஸ்.எஸ் அமைப்பை தடை செய்ததே தவறு என்றும் அதன் சேவை கடந்த 50 ஆண்டுகளாக முடக்கப்பட்டது என்றும் பாராட்டி நீதிமன்றத்தில் பதிவு செய்தனர். தேசத் தந்தை காந்தி கொலை வழக்கில் தொடர்புள்ள இயக்கம் ஆர்.எஸ்.எஸ் என்பது குறித்து இவர்கள் கவலைப்படவே இல்லை. இப்படி ஏராளமாக பட்டியலிட முடியும்.

உச்சநீதிமன்றத்தின் 5 நீதிபதிகள் கொண்ட கொலிஜியத்தின் ஒப்புதலுக்கு பிறகு நீதிபதிகள் நியமனம் நடக்கிறது. கொலிஜியம் தேர்வு செய்யும் நீதிபதிகளை ஒன்றிய ஆட்சி ஏற்க மறுப்பது, அதிகரித்து வருவதாக தலைமை நீதிபதி கவாய் அண்மையில் வருத்தத்துடன் கூறியுள்ளார். இந்த நிலையில் அய்.ஏ.எஸ், அய்.பிஎஸ் அதிகாரிகளை தேர்வு செய்யும் வழிமுறைகளை பின்பற்றி இந்திய நீதித்துறை சர்வீஸ் (அய்.ஜே.எஸ்) ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்படுகிறது. சட்ட ஆணையங்களும் இதே கருத்தை பரிந்துரைத்துள்ளன.

அரசியல் சட்டத்தின் 312 வது பிரிவு இதை வலியுறுத்துகிறது. ஏற்கனவே சட்ட ஆணையங்களும் வி.ஆர் கிருஷ்ணா ஐயர் போன்ற மூத்த நீதிபதிகளும் இந்த கருத்தை வலியுறுத்தி உள்ளனர். குறிப்பாக பாஜக ஆட்சிக்கு பிறகு நீதித்துறையில் பல நீதிபதிகள் மதச்சார்பின்மைக்கு எதிராக கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர். நீதித்துறையின் மீது மக்கள் நம்பிக்கை இழந்து விட்டால் சிதைந்து போய் கிடக்கும் இன்றைய ஜனநாயக அமைப்பு மேலும் சீர்குலைந்து விடும் என்பது உறுதி!

# கழக ஏட்டுக்கு நன்கொடை வழங்கும் திட்டத்துக்கு ஆதரவு கூடுகிறது!

புரட்சிப் பெரியார் முழக்க வளர்ச்சிக்காக நன்கொடையாளர்களை வாட்ஸ்அப் வழியாக திரட்டி மாதம் தோறும் நன்கொடை வழங்கும் சிறப்பான செயல் திட்டம் ஒன்றை தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் திருப்பூர் ஆசிரியர் சிவகாமி அவர்களும் ஈரோடு ஆசிரியர் சிவகுமார் அவர்களும் தொடங்கியுள்ளனர்.

100 தோழர்களை இலக்கு வைத்து தொடங்கப்பட்டுள்ள இந்த குழுவில் ஆதரவாளர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. கடந்த மாதம் ரூ. 8000 நன்கொடையாக தரப்பட்டது. ஜூலை மாதத்திற்கு ரூ. 16,000 நன்கொடையாக வழங்கியுள்ளனர் நன்றியுடன் பெற்றுக் கொண்டோம் ஆசிரியர்.

# பெரியார் முழக்க வளர்ச்சி கலந்தாய்வு கூட்டம்



புரட்சிப் பெரியார் முழக்க வளர்ச்சி குறித்து இணைய வழியில் 4.07.2025 அன்று கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது.

பெரியார் முழக்க தற்போதைய நிதிநிலை பற்றியும், இனிவரும் காலங்களில் சந்தா சேர்ப்பதை வேகப்படுத்துவது பற்றியும், பெரியார் முழக்க வளர்ச்சி நிதி பற்றியும், ஏற்கெனவே 7000 அரசு நூலகங்களில் நமது இதழ் வாங்கிக்கொள்ளலாம் என்ற அரசாணையை நடைமுறைப்படுத்துவது பற்றியும் தோழர்கள் தங்களின் கருத்தை முன்வைத்தனர்.

கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் கலந்து கொண்டனர். கழக தலைமைக் குழு உறுப்பினர்கள், கழக மாவட்ட பொருப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# நிமிர்வோம் வாசகர் வட்டம்



நிமிர்வோம் வாசகர் வட்டத்தின் 28வது கூட்டம் தோழர் சிரிஜன் தலைமையில் கழகத் தலைமை அலுவலகம் மயிலாப்பூரில் நடைபெற்றது. நிகழ்வை மாவட்டச் செயலாளர் உமாபதி ஒருங்கிணைத்தார். மறைந்த கழகத் தோழர் கன்னியப்பன் அவர்களின் படத்திறப்பு நிகழ்வும் நடைபெற்றது.

அரசியலாக்கப்படுகிறதா நீதித்துறை? என்ற தலைப்பில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் உரையாற்றினார். 'அம்பேத்கரின் முகவுரை இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் ரகசிய வரலாறு' என்ற நூலை எட்வின் பிரபாகரன் திறனாய்வு செய்தார். பேராசிரியர் சுப்பிரமணியின் 'இதழியல் களத்தில் பெரியார்- ஆய்வும் தொகுப்பும்' நூலை ர.பிரகாசு திறனாய்வு செய்தார். நிகழ்வில் 30-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# கழகத் தோழர் கன்னியப்பன் முடிவெய்தினார்!


சென்னை மாவட்டக் கழகத் தோழர் கன்னியப்பன் உடல்நலக் குறைவால் கடந்த 12.07.2025 அன்று முடிவெய்தினார். அவரின் உடலுக்கு கழகத் தோழர்கள் மாலை அணிவித்து புகழ்வணக்கம் செலுத்தினார்கள்.



இறுதி ஊர்வலத்தில் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி, மாவட்டத் தலைவர் வேழவேந்தன், மாவட்ட அமைப்பாளர் எட்வின் பிரபாகரன், மாவட்ட துணைச் செயலாளர் இராவணன், வடசென்னை மாவட்டத் தலைவர் சேத்துப்பட்டு ராஜேந்திரன், இளைஞரணி அமைப்பாளர் அருண், தட்சிணாமூர்த்தி, ஏசுகுமார், மற்றும் கழகத் தோழர்கள் நிகழ்வில் பங்கேற்றனர்.

# மனித மூளையின் உற்பத்தியே கடவுள் உணர்ச்சி

## கொளத்தூர் நாத்திக விழா சிந்தனை(7) -விடுதலை இராஜேந்திரன்




விபத்துகளும் மரணங்களும் கடவுள் விதிப்படிதான் நிகழ்கின்றன என்று மதவாதிகள் கூறுகிறார்கள். அஹமதாபாத் விமான விபத்தில் 234 பேர் இறந்தார்கள். விபத்துக்களை எவராலும் தடுக்க முடியாது; எல்லாம் விதிவசம் என்று கூறினார் உள்துறை அமைச்சர் அமித் ஷா. ஆனால் மக்கள் அமித் ஷாவின் இந்த கருத்தை நம்புவதற்குத் தயாராக இல்லை.

விமானத்தின் கருப்புப் பெட்டியை உடைத்து பார்த்தால் அங்கே "விதியோ கடவுளோ இல்லை". விமான விபத்துக்குக் காரணம் எரிபொருள் நிறுத்தப்பட்டது தான் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது எரிபொருளை நிறுத்தியது யார் என்ற அழுத்தமான சந்தேகமே இப்போது எழுந்துள்ளது. கடவுள் தான் காரணம் என்று சொன்னால் மக்கள் நம்புவார்களா? நிச்சயம் நம்பமாட்டார்கள், இங்கே கடவுள் மறுப்பு வந்து விடுகிறது.

கடவுளால் அனுப்பி வைக்கப்பட்டதாக கூறப்பட்ட மன்னர்கள் ஆட்சி இப்போது இல்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி வந்துவிட்ட பிறகு கடவுள் ஓரங்கட்டப்பட்டு விட்டார்.

"நீங்கள் என்ன சொன்னாலும் கோயிலுக்குப் போனால் ஒரு ஃபீலிங் வருது பாருங்க.. அதுதான் கடவுள்" என்பதே பொதுவாக நம்பிக்கையாளர்கள் கூறும் கருத்து. அது என்ன பீலிங்? அது உடலுக்கு வெளியிலிருந்து கடவுளால் திணிக்கப்படும் உணர்வா? நிச்சயமாக இல்லை. இந்த 'பீலிங்', 'ஆன்மீக உணர்வு' அனைத்துமே மூளையின் செயல்பாடுகள் என்பதே அறிவியல்.

மனிதனின் பேச்சுத்திறன், கேட்கும் திறன், நினைவாற்றலைக் கட்டுப்படுத்துதல் அனைத்தும் மூளை என்ற பொருளில் நிகழும் செயல்பாடுகள் தான். மூளையில் இதைக் கட்டுப்படுத்தும் பகுதிக்கு ***(temporal lobe)* டெம்பரல் லோப்** என்று பெயர். காதுக்கு அருகே இது அமைந்துள்ளது. மூளையின் இந்த பகுதி பாதிப்புக்கு உள்ளாகும் போது வித்தியாசமான அனுபவங்கள் ஏற்படுகின்றன அதைத்தான் 'ஆன்மீக உணர்வுகள்' என்கிறார்கள் என்பதை கண்டறிந்தார், கனடா நாட்டின் நரம்பியல் ஆய்வாளர் டாக்டர் பெர்சிங்கர்.

"நீங்கள் என்ன சொன்னாலும் கோயிலுக்குப் போனால் ஒரு ஃபீலிங் வருது பாருங்க.." அதுதான் கடவுள்" என்பதே பொதுவாக நம்பிக்கையாளர்கள் கூறும் கருத்து. அது என்ன பீலிங்? அது உடலுக்கு வெளியிலிருந்து கடவுளால் திணிக்கப்படும் உணர்வா? நிச்சயமாக இல்லை. இந்த 'பீலிங்', 'ஆன்மீக உணர்வு' அனைத்துமே மூளையின் செயல்பாடுகள் என்பதே அறிவியல்.

மனிதனின் பேச்சுத்திறன், கேட்கும் திறன், நினைவாற்றலைக் கட்டுப்படுத்துதல் அனைத்தும் மூளை என்ற பொருளில் நிகழும் செயல்பாடுகள் தான்.

"கடவுள் எனக்கு உத்திரவிட்டார்; ஏதோ ஒரு ஒளிவட்டம் எனக்கு மனதில் தோன்றியது" என்று பலரும் கூறுவது மூளையில் ஏற்படும் பாதிப்புகளே என்று அறிவியல் பூர்வமாக அவர் நிரூபித்தார்.

உலகப் புகழ் பெற்ற கலிபோர்னியா பல்கலைகழக நரம்பியல் விஞ்ஞானி டாக்டர் வி.எஸ் இராமச்சந்திரன் மண்டையில் குறிப்பிட்ட இடத்தில் தாக்கப்படுபவர் மட்டும்தான் இத்தகைய இறையருள் கிட்டும் என்பதில்லை. தொடர்ந்து ஆன்மீக சிந்தனையால் தாக்கப்படுபவர்களுக்கு இத்தகைய உள்காயம் ஏற்படக்கூடும் என்கிறார்.

மூளையின் பகுதியைப் போல உணர்ச்சிகளையும் உணவு சார் நினைவுகளையும் ஆளும் பகுதி மூளையில் இருக்கிறது. இதன் பெயர் ***cerbrum.*** இந்த இரண்டு பகுதிகளும் இணைந்து செயல்படும்போது ஏற்கனவே கடவுள் நம்பிக்கையில் உள்ளவர்களுக்கு உணர்ச்சிகள் பீறிட்டு எழுகின்றன என்ற ஆய்வை நிறுவினார் நரம்பியல் விஞ்ஞானி வி.எஸ் ராமச்சந்திரன்.

நான் என்ற உணர்வு மறைந்து பிரபஞ்சம் அல்லது கடவுளோடு இணைகிறேன் என்ற ஆன்மீகப் பார்வை கடவுளிடமிருந்து வரவில்லை அது **'பேரியட்டல் லோப்'** ***parietal lobe*** என்ற பகுதியின் செயல்பாட்டில் இருந்து தான் வருகிறது என்று அறிவியல் ரீதியாக அவர் நிரூபித்தார். மதத் தலைவர்களிடம் இதற்கு கடும் எதிர்ப்புகள் வந்தன.

ஏன் ஆத்திரப்படுகிறார்கள்? "நீங்கள் நம்பும் கடவுள் நம்பிக்கையோடு தொடர்பு கொள்ளும் ஆண்டனா என்று இதை நீங்கள் ஏன் கருதக்கூடாது?" என்று அவர் கேள்வி கேட்டார். **காட் ஹெல்மெட்** ***(God Helmet)*** ஒன்றை அவர் தயாரித்தார்.

**காட் ஹெல்மெட் கடவுள் தலைக்கவசம்!** இதுதான் அவரது தயாரிப்பின் பெயர். மின்சாரத்தில் இயங்கும் இந்தக் கவசம், இதனை அணிந்திருப்பவரின் மூளையில் உள்ள டெம்பரல் லோப் பகுதியைக் குறி வைத்து காந்தப்புலங்களை உருவாக்க வல்லது. எவ்வித நரம்பியல் நோயும் இல்லாத நூற்றுக்கணக்கான மனிதர்கள், கண்கள் கட்டப்பட்ட நிலையில் ஒரு தனியறையில் இந்தக் 'கவச' சோதனைக்கு உட்படுத்தப் பட்டனர். பல்வேறு நாடுகளையும் மதங்களையும் சார்ந்த அந்த நபர்கள் இந்த மூன்று நிமிடச் சோதனையின்போது தத்தம் கலாச்சாரத்துக்கு ஏற்ப, தாங்கள் ஏசுவையோ புத்தனையோ கண்டதாகக் கூறினர்.

டேவிட்சன் என்ற விஞ்ஞானி, சிறித்தவ ஜெபக் கூட்டங்களில், ஜெபித்துக் கொண்டிருக்கும்போதே, திடீரென்று உளறத் தொடங்கும் பெண்களின் மூளைகளை ஸ்கேன் ***(MRI Scan)*** செய்தார். அத்தருணத்தில் அவர்களது மூளையுடைய முன்பகுதி ஏறத்தாழ செயலிழந்திருப்பதைக் கண்டார். தன் மீதான சுயகட்டுப்பாட்டை மனிதனுக்கு வழங்கும் மூளையின் முன்பகுதி செயலிழப்பதால், மொழி பிறழ்ந்து வரும் இந்த உளறலைத்தான். 'அந்நிய மொழி' என்று கிறித்தவர்கள் கூறுகின்றனர்.

தியானத்தில் ஈடுபடும்போது, 'தான்' என்ற உணர்வு மறைந்து பிரபஞ்சத்துடன் இரண்டறக் கலந்து விடுவதாகக் கூறும் புத்த பிக்குகளும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர். ஒரு குறிப்பிட்ட பொருள் அல்லது சிந்தனையின் மீது மட்டுமே மூளை ஒன்று குவிக்கப்படும்போது, திசை மற்றும் வெளி குறித்த பிரக்ஞையை வழங்குகின்ற **'பாரிடல் லோப்'** செயலிழப்பதையும், அதன் காரணமாகவே இவர்கள் இத்தகைய பிரமைக்கு ஆளாவதையும் விஞ்ஞானிகள் சுட்டிக் காட்டினர்.

இவையன்றி, பட்டினி கிடத்தல் (விரதம்), இரத்தச் சர்க்கரையின் அளவு அலைபாய்தல், திரும்பத் திரும்ப ஒரே சொல்லை உச்சரிக்கும் மந்திர உச்சாடனங்கள், ஒரே விதமான அசைவு கொண்ட நடனம் ஆகியவையும் 'மனித சக்திக்கு அப்பாற்பட்டவை' என்று சொல்லப்படும் அனுபவத்தைத் தரவல்லவை. மிக உயர்ந்த சிகரங்களுக்கு (அமர்நாத்) செல்லும்போது மூளைக்கு பிராணவாயு செல்வது குறைவதும், கஞ்சாவும், வேகமாகப் பக்கவாட்டில் சுழலும் குடைராட்டினமும் கூட 'ஆன்மீக அனுபவங்களை'த் தூண்டக்கூடும் என்கிறது நரம்பியல் விஞ்ஞானம்.

மூளையின் உட்பகுதியில் உள்ள பீனியல் சுரப்பியிலிருந்து வெளியாகும் **டைமெதில் டிரிப்டாமைன்** என்ற வேதிப்பொருள் தான் இது போன்ற மாயத்தோற்றங்களை உருவாக்குகிறது என்று 'ஆன்மீக மூலக்கூறு' என்ற தனது நூலில் குறிப்பிடுகிறார் ரிக் ஸ்டிராஸ்மேன். மொத்தத்தில் பக்தர்கள் துரும்பில் தேடிய இறைவனை நரம்பில் கண்டுபிடித்ததுடன், **'இறை நரம்பியல்'** ***(Neuro Theology)*** என்றொரு துறையையும் உருவாக்கிவிட்டது அறிவியல்.

எனினும், தூக்க மாத்திரை சாப்பிட்டுத் தூக்கத்தை வரவழைப்பது போல கடவுள் மாத்திரை சாப்பிட்டுக் கடவுளை வரவழைக்கலாம் என்றோ, பேதி மாத்திரை போன்றதொரு மாத்திரையால் மூளையிலிருந்து சுமுகமாகக் கடவுளை வெளியேற்றி விடலாம் என்றோ அறிவியல் கூறவில்லை. மனித மூளையின் உள்ளே தோன்றும் மாயத்தோற்றங்களோ, விவரிக்கமுடியாத 'பரவச உணர்வுகளோ', வெளியே கடவுள் ஒன்று இருப்பதற்கான சான்றுகள் இல்லை என்பதையே இந்த ஆய்வுகள் நிறுவுகின்றன.

(தொடரும்...)

# பனகல் அரசரும் திராவிட மாடலும்

நீதிக் கட்சியின் தலைவர்; இரண்டு முறை சென்னை மாகாண முதல்வராக இருந்த பனகல் அரசரின் பிறந்தநாள் இன்று!

மகத்தான சாதனைகளை புரிந்தவர். தமிழ்நாட்டின் திராவிட மாடல் ஆட்சிக்கும் பனகல் அரசரின் ஆட்சிக்கும் பல ஒற்றுமைகள் உண்டு. அரசு பதிவேடுகளில் 'பறையர் பஞ்சமர்' என்ற இழிசொற்களை நீக்கி ஆதிதிராவிடர் என்று அறிவிக்க ஆணையிட்டவர் பனகல்அரசர். திராவிட மாடல் ஆட்சி ஆதி திராவிட நல விடுதிகளை 'சமூக நீதி' விடுதிகளாக பெயர் மாற்றம் செய்துள்ளது. அவமானச் சொல்லான 'காலனி' என்ற சொல்லை அரசு பதிவேடுகளில் இருந்து நீக்கி இருக்கிறது. மாநிலங்களின் உரிமைக்காக திராவிட மாடல் ஆட்சி குரல் கொடுப்பதைப் போல் பனகல் அரசரும் போராடினார். பிரிட்டிஷ் அரசிடம் இருந்த மருத்துவத் துறையை கடுமையாக எதிர்த்துப் போராடி, மாகாண சட்ட மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி, மாநில உரிமைக்கு கொண்டு வந்தவர் பனகல் அரசர்.

முதல் இந்திய மருத்துவக் கல்லூரியை அவர்தான் நிறுவினார். இன்று மும்மொழி வழியாக சமஸ்கிருதம் திணிக்கப்படுகிறது. அன்று அரசு ஆணைகள் ஏதும் இல்லாமலே, மருத்துவக் கல்லூரியில் சேர சமஸ்கிருதம் தெரிந்திருக்க வேண்டும் என்று 'மனுவாத' அதிகார வர்க்கம் பின்பற்றிய நடைமுறையை முடிவுக்கு கொண்டு வந்தவர் பனகல்அரசர். அன்றைக்கு நீதிக் கட்சியில் இருந்த தமிழறிஞர் கி .ஆ .பெ விசுவநாதம் இதை பனகல் அரசரிடம் பாதிக்கப்பட்ட மாணவரை நேரில் அழைத்துப்போய் சுட்டிக்காட்டிய போது அதிர்ச்சி அடைந்தார் பனகல். அரசாணை ஏதும் இல்லாமல் நடைமுறைப்படுத்திய இந்த வர்ணாசிரமத்தை அதிகாரிகளை நேரில்அழைத்து எச்சரித்து நிறுத்தச் செய்தார். எனவே அதற்கு அரசாணை எதுவும் இல்லை என்பதே வரலாறு.

கடுமையான எதிர்ப்புகளை சந்தித்த அறநிலையத்துறை மசோதாவை இரண்டு முறை சட்டமன்றத்தில் நிறைவேற்ற வேண்டியிருந்தது. மசோதாவுக்கு இன்றைய ஆளுநர் ரவியைப் போல அன்றைய வைஸ்ராய் ரீடிங் ஒப்புதல் தர மறுத்தார். அன்றைய மாகாண ஆளுநர் வெலிங்டன் இடம் தொடர்ந்து பேசி அழுத்தம் தந்து வைஸ்ராயை ஒப்புதல் தர வைத்தார்பனகல். மாகாண சட்டமன்ற தலைவரை ஆளுநரே நேரடியாக நியமித்ததை எதிர்த்து போராடி சட்டமன்றத்தில் தேர்தல் வழியாக தேர்ந்தெடுக்கச் செய்தார். அறநிலையத்துறை சட்டத்தைக் கொண்டு வருவதற்கு தனக்கு உதவியாக சட்ட நிபுணர் கோபால்சாமி அய்யங்காரை நியமித்துக் கொண்டார். அறநிலையத்துறை முதல் தலைவராக நீதிபதி சதாசிவம் அய்யரை நியமித்தார்.

மனுவாதிகளிடமிருந்து வந்த எதிர்ப்பை அதே மனுவாதிகளை வைத்து முறியடித்தார். காங்கிரஸ் கட்சியில் இருந்த பெரியார் நீதிக் கட்சியின் இந்த சாதனையை ஆதரித்து நாடு முழுதும் பிரச்சாரம் செய்தார்.

சென்னை பல்கலைக்கழகம், அண்ணாமலை பல்கலைக்கழகம், அரசு தேர்வாணையம், கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்குக் குழு என்று சமூக நீதிக்கு பாதை போட்டவர் அவர்தான்!

திருச்சி தேசியக் கல்லூரி 'தேசத்தந்தை 'காந்திக்கு வரவேற்பு பத்திரத்தை சமஸ்கிருதத்தில் வாசித்தது. அதே கூட்டத்தில் காந்தி அதை கண்டித்தார். அதேபோல் முதல்வர் பனகல் அரசருக்கும் சமஸ்கிருதத்தில் வரவேற்பு பத்திரம் வாசித்தபோது அதைக் கண்டித்து சமஸ்கிருதத்திலே பதில் அளித்து பேசியவர் பனகல்அரசர் . அவமதிக்க நினைத்த மனுவாதிகள் அதிர்ந்து போனார்கள்.

நீதிக் கட்சியில் பனகல் அரசர் சந்தித்த அதே மனுவாத சக்திகளின் எதிர்ப்புகளே இப்போது திராவிட மாடல் ஆட்சியிலும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. **திராவிடம் வெல்லும்!**

**விடுதலை இராசேந்திரன்**
***முகநூல் பதிவு 10.07.2025***

Posted at Egmore RMS, Pathirika Channel,Chennai-08.
date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 licenced to post wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# பண்ணையார்களை பணியவைத்த கொரடாச்சேரி

முரசொலியில் பெரியார் மண் தொடரில் ர.பிரகாசு எழுதி வரும் கட்டுரை தொடரில் நாகை மாவட்டம் கொரடாச்சேரி என்ற ஊரின் வரலாறு இது. எல்லா சாலைகளும் ரோமாபுரியை நோக்கி' என்பதுபோல, திருவாரூர் மாவட்டம், கொரடாச்சேரியில் 'எல்லா சாலைகளும் பெரியாரை நோக்கி'த்தான். இங்குள்ள கண்கொடுத்தவனிதம் கிராமம், இருபதுக்கும் மேற்பட்ட கிராமங்களுக்கான இணைப்புச் சங்கிலி. அந்த ஊரில், எந்தத் திசையில் சென்றாலும், தந்தை பெரியார் சிலையாக இருப்பார். மொத்தம் 7 சிலைகள் உள்ளன.

கருப்புச்சட்டை சகிதமாய் எவரேனும் இன்றும் தென்படுவர். அங்கு அந்தக் கருப்புச் சட்டைகள் உருவான காலகட்டம் 1950. நேரடியாகப் பெரியாரின் பேச்சைக் கேட்டோ, எழுத்தைப் படித்தோ கருப்புச்சட்டை அணிந்தவர்கள் அல்ல அவர்கள். ஆனால், தாங்கள் சந்தித்த அடக்குமுறைக்கு எதிரான ஆயுதமாகக் கருப்புச்சட்டையைக் கருதினர். அந்த ஆயுதத்தை அவர்கள் ஏந்த பாலமாக இருந்தது திராவிட விவசாயத் தொழிலாளர் சங்கம்.

கொரடாச்சேரி ஒன்றியத்தில் உள்ள கண்கொடுத்தவனிதம், பருத்தியூர், விடையபுரம், வடபாதி, தென்பாதி, கூத்தாநல்லூர் உள்ளிட்ட இருபதுக்கும் மேற்பட்ட கிராமங்கள் கீழப்பண்ணை, மேலப்பண்ணை, நாயுடுப் பண்ணை என சில பண்ணைகள் வசம் இருந்தன. கம்யூனிஸ்ட் அமைப்புகள் அங்கு வேரூன்றி இருந்ததால், கூலி உயர்வுக்கான போராட்டங்கள், பேச்சுவார்த்தைகளுக்கு பஞ்சமில்லை. ஆனால், கூலி மட்டுமே அங்கு பிரச்சினையாக இல்லை. செருப்பு போடக்கூடாது, துண்டு போடக்கூடாது, மேல் சட்டை அணியக்கூடாது, படிக்கச் செல்லக்கூடாது என தீண்டாமைக் கொடுமைகளும் உச்சத்தில் இருந்தன. தேநீர்க் குவளைகளில் கூட இருந்த பாகுபாடு அவர்களின் சுயமரியாதையைச் சீண்டிக்கொண்டிருந்த வேளையில்தான், 'திராவிட விவசாயத் தொழிலாளர் சங்கம்' டெல்டா மாவட்டங்களில் காட்டுத்தீ போல பரவிக் கொண்டிருந்தது. பண்ணை அடிமைத்தனத்தோடு சேர்த்து சாதியத்தின் இருப்பையும் சுட்டுப் பொசுக்கிக் கொண்டிருந்தது அந்த காட்டுத் தீ. அது, கொரடாச்சேரி விவசாயத் தொழிலாளர்களையும் ஈர்த்தது. ச.மாரிமுத்து, மாணிக்கம், கிட்டு, அய்யாசாமி, ஒளிச்செங்கோ என பத்துக்கும் மேற்பட்ட களப் போராளிகளை அப்பகுதிகளில் உருவாக்கியது. இவர்களின் செயல்பாடுகள் பண்ணையார்களுக்குப் பெரும் நெருக்கடியாக உருவானது. பண்ணையார்கள் பெரியாரை நோக்கி ஓடினர். பேச்சுவார்த்தையில் பண்ணையார்கள் பணிந்ததோடு மட்டுமின்றி, பெரியாரை வைத்து பயிற்சிப்பள்ளி நடத்த குடும்பமாய் ஒத்துழைக்கும் அளவுக்கு நிலைமை தலைகீழாய் மாறியது.

1970, 1980, 1990-களில் கொரடாச்சேரி திராவிடர் கழகத்தின் கோட்டையாக திகழ்ந்தது. வீட்டுக்கு ஒருவர் திராவிடர் கழக உறுப்பினராக இருந்தனர். பெரியார் பிறந்த நாள் அங்கு அறிவிக்கப்படாத உள்ளூர் விடுமுறை. 1990-களுக்கு முன்புவரை அங்கு ஊராட்சி மன்றத் தலைவர்கள் திராவிடர் கழகத்தைச் சேர்ந்தவர்களே. இன்றும் பருத்தியூர், விடையபுரம், கண்கொடுத்தவனிதம் திராவிடர் கழகக் கோட்டைகள்தான். இருபதுக்கும் மேற்பட்ட ஊர்களில் உயிர்ப்போடு இருக்கிறது திராவிடர் கழகம். "கொரடாச்சேரி ஒன்றியத்தில் பெரியார் கொள்கைகள் நல்விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. இந்தப் பகுதிகளில் மக்களின் சமூக, பொருளாதார, கல்வி நிலைகள் உயர்ந்துள்ளன. சாதிய உணர்வு மேலோங்கவில்லை. இவற்றை நாம் 'பெரியாரால் பிழைத்த கிராமங்கள்' என்றும் சொல்லலாம். கருப்புச்சட்டைகளின் களச் செயல்பாடுகள் உருவாக்கிய மாற்றங்களை அங்கே பார்க்க முடியும்."

தகவல்-சுந்தரபுத்தன், பத்திரிகையாளர்.

# வடசென்னையில் கழக கலந்துரையாடல் கூட்டம்



திராவிடர் விடுதலைக் கழகத்தின் வடசென்னை கலந்துரையாடல் கூட்டம் 13.07.25 ஞாயிறு அன்று மாலை 06.30 மணியளவில் சென்னை அயனாவரத்தில் உள்ள சேத்துப்பட்டு இராஜேந்திரன் இல்லத்தில் அருள்தாஸ் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் கலந்து கொண்டார்.

கூட்டத்தில் புதிய தோழர்களை சேர்ப்பது வட சென்னையில் கழக செயல்பாடுகளை தீவிரப்படுத்துவது மற்றும் தெருமுனை, பரப்புரை கூட்டங்கள் நடத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டது. புரட்சிப் பெரியார் முழக்கத்திற்கு வடசென்னை மாவட்டம் சார்பில் 100 உறுப்பினர்களை சேர்ப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது. நிறைவாக கூட்டத்தில் கலந்து கொண்ட வடசென்னை மாவட்டத் தலைவர் சேத்துப்பட்டு இராசேந்திரன், வடசென்னை மாவட்ட அமைப்பாளர் தட்சிணாமூர்த்தி, தோழர்கள் ராஜன், தினகரன், சிகாமணி, கழகப் பணிகளை முன்னெடுப்பதை குறித்து கருத்துக்களை தெரிவித்தனர்.

தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி, மாவட்டத் தலைவர் வேழவேந்தன், மாவட்ட அமைப்பாளர் எட்வின் பிரபாகரன், இளைஞரணி அமைப்பாளர் அருண், தமிழ்நாடு மாணவர் கழக ஒருங்கிணைப்பாளர் பேரன்பு, திருவல்லிக்கேணி பகுதி தலைவர் கோபி, திருவல்லிக்கேணி பகுதி அமைப்பாளர் சூர்யா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சேலத்தில் கழக தெருமுனைக் கூட்டம்



"இந்தியாவே திரும்பிப் பார்க்கும் திராவிட மாடல்" என்ற தலைப்பில் சேலம் மாநகர திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் தெருமுனைக் கூட்டம் 05.07.2025 அன்று பொன்னம்மாப்பேட்டை தண்ணீர் தொட்டி அருகில் மாலை 6.00 மணிக்கு நடைபெற்றது. கூட்டத்திற்கு சேலம் மாநகரத் தலைவர் பாலு தலைமை வகித்தார். சேலம் மாநகர அமைப்பாளர் தேவராஜ் வரவேற்புரையாற்றினார். கூட்டத்தில் சேலம் மாநகரச் செயலாளர் ஆனந்தி, சேலம் மாநகர தலைவர் பாலு ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். சேலம் மாநகர பொருளாளர் பிரபு மற்றும் சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வெற்றிமுருகன் ஆகியோரின் அரசியல் நையாண்டி நிகழ்வும் நடைபெற்றது. நிறைவாக நந்தகுமார் நன்றி கூற கூட்டம் நிறைவு பெற்றது. தோழர்கள் அனைவருக்கும் இரவு உணவு மற்றும் தேநீர் தோழர் நந்தகுமார் அவர்கள் வழங்கினார். தோழர்கள் அருண்பாண்டியன், பாலு ராஜசேகர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### சங்கிகளின் மிரட்டல்

கூட்டம் தொடங்குவதற்கு அரைமணிநேரத்திற்கு முன்பாகவே 30க்கும் மேற்பட்ட போலீஸார் குவிக்கப்பட்டிருந்தனர். தோழர்கள் காவல்துறை அதிகாரிகளிடம் சென்று எதற்காக இவ்வளவு காவல்துறையினர் குவிக்கப்பட்டுள்ளனர் என கேட்டதற்கு பாஜக, RSS அமைப்பைச் சேர்ந்த சிலர் காவல் நிலையத்திற்கு சென்று இதுபோன்று பரப்புரை மேற்கொண்டால் அதை நாங்கள் தடுப்போம் என கலவர நோக்குடன் பேசி சென்றுள்ளனர் என்பது தெரிய வந்தது. இதனால் அங்கு பதற்றமான சூழல் நிலவியது. சங்கிகளின் இந்த மிரட்டலுக்கு அஞ்சாமல் கூட்டத்தை திட்டமிட்டபடி தோழர்கள் சிறப்பாக நடத்தி முடித்தனர்.

# திருப்பூரில் கலந்துரையாடல் கூட்டம்



மாநகர ஆலோசனைக் கூட்டம் 09-07-2025 மாலை 5 மணி அளவில் ஆத்துப்பாளையம் மதன் அவர்களின் இல்லத்தில் நடைபெற்றது. தலைமை: மதன் முன்னிலை, முத்து. தீர்மானங்கள்:

- விநாயகர் சதுர்த்தி என்ற பெயரில் நீர் நிலைகளில் இரசாயன பொருட்களால் செய்யப்பட்ட விநாயகர் சிலை கரைப்பதை தடுத்து தலைமைக் கழக வழி காட்டுதலின் படி மாவட்ட ஆட்சியர், மாசுகட்டுப்பாட்டு வாரியம், அறநிலையத் துறை, காவல் ஆணையாளர் அலுவலம் ஆகிய அதிகாரிகளிடம் சட்ட நடவடிக்கை எடுக்க வழியுறுத்தி நேரில் மற்றும், பதிவு தபால் மூலம் புகார் விண்ணப்பம் வழங்குவது.
- கல்வி வள்ளல் காமராசர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தெருமுனை கூட்டம் நடத்துவது.
- பெரியார் முழக்க வளர்ச்சி நிதி வழங்குதல் கல்வி வள்ளல் காமராசர் அவர்களின் பிறந்தநாள் விழா பொது கூட்டம் 15 வேலம்பாளையம் பகுதியில் நடத்துவது மற்றும் தோழர் மலரவன் அவர்களின் படத்திறப்பு மற்றும் பொதுக்கூட்டத்திற்கு கழகத் தலைவர் மற்றும் பொதுச் செயலாளரை அழைப்பது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நிகழ்வில் சு.துரைசாமி மாநில பொருளாளர், வீ.சிவகாமி தலைவர் தமிழ்நாடு அறிவியல் மன்றம், முகில் இராசு மாவட்டத் தலைவர், தனபால் மாநகர தலைவர், மாரிமுத்து மாநகர துணைத் தலைவர் இராமசாமி தெற்குப் பகுதி கழகச் செயலாளர், முத்து மாநகர அமைப்பாளர் திவிக, சரசுவதி மாநகர அமைப்பாளர் திவிக அய்யப்பன் வடக்கு ஒன்றிய அமைப்பாளர், கனல்மதி மாவட்ட தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளர், தோழர்கள் இராசசிங்கம் மோகன் அம்மாபாளையம், சிரிஜா, வெங்கட், யாழிசை பெரியார் பிஞ்சு தழல் சிறகன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துக்களை வழங்கினர்.

# கீழடி ஆய்வறிக்கையை வெளியிடக்கோரி மதுரையில் கண்டன ஆர்ப்பாட்டம்

தமிழர்களின் வரலாற்றை மறைக்கும் மோடி அரசை கண்டித்து திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக 7.7.2025 அன்று மதுரையில் திருவள்ளுவர் சிலை அருகில் கிழடி ஆய்வறிக்கையை வெளியிடக்கோரி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. காமாட்சி பாண்டி தலைமையில், சத்தியமூர்த்தி முன்னிலையில், வாசுகி அவர்கள் நிகழ்வினை தொகுத்து வழங்கினார். சிறப்புரையாக கழகத்தின் மாவட்ட காப்பாளர் தளபதி தொடக்க உரையாற்றினார். தொல்லியல் ஆய்வாளர் அமர்நாத் ராமகிருஷ்ணனை இடம் மாறுதலுக்கு உட்படுத்திய ஒன்றிய மோடி அரசுக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது. அமர்நாத் ராமகிருஷ்ணனை தமிழக தொல்லியல் துறை தலைவராக தேர்ந்தெடுத்து ஆய்வினை சிறப்புடன் நடத்த வழி செய்யவும், தமிழ்நாடு அரசை திராவிடர் விடுதலை கழகத்தின் சார்பாக கேட்டுக் கொள்ளப்பட்டது. தமிழர் நாகரிகத்தை 'பாரதீய' நாகரிகம் என்று குழப்பும் சங்கி அடிமை மா.பா பாண்டியராஜனையும் - பாரதிய ஜனதா சங்கிகளையும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

தோழமை அமைப்பு தோழர்கள் தங்களின் கண்டனத்தைப் பதிவு செய்தனர். பசும்பொன் பாண்டியன் (அண்ணா திராவிட மக்கள் முன்னேற்றக் கழகத் தலைவர்), பேரறிவாளன் (பொதுச் செயலாளர் தமிழ் புலிகள் கட்சி), கபீர் நகர் கார்த்திக் (துணைப் பொதுச் செயலாளர் ஆதித் தமிழர் பேரவை), விடுதலை வீரன் (மாநில அமைப்புச் செயலாளர் திராவிடர் தமிழர் கட்சி), அமர்நாத் (மாநகர பொறுப்பாளர் திராவிடர் இயக்கத் தமிழர் பேரவை), தமிழ்ப்பித்தன் (தந்தை பெரியார் திராவிடர் கழகம் மாநில செயற்குழு உறுப்பினர்), குமரன் (புரட்சிகர இளைஞர் முன்னணி), தெய்வா வழக்கறிஞர் (தமிழ் தேசிய மக்கள் முன்னணி மாநகர பொறுப்பாளர்), மெய்யப்பன் (தமிழ் தேச குடியரசு இயக்கம்), நிலவழகன் (தலைவர் - மக்கள் தமிழகம் கட்சி), மணி பாபா (தலைவர் தமிழக வாழ்வுரிமை மக்கள் கட்சி), ராமலிங்கம் (மாநில ஒருங்கிணைப்பாளர் மக்கள் கலை இலக்கியக் கழகம்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : July 18, 2025

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran